பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை

நினைவுப் பேருரை - 10

# மகாஜனாவின் புகழ்பெற்ற முன்னோடிக் கவிஞர்கள்


செல்வி விமலா கந்தையா

உதவிக் கல்விப் பணிப்பாளர் - தமிழ்

வலிகாமம் கல்வி வலயம்



மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை 24.06.2006.

**விமலாவதி கந்தையா**

கலைப்பட்டதாரி, கல்வியியல் டிப்ளோமா:

கல்வி முதுதத்துவமாணி - யாழ் பல்கலைக்கழகம்

சைவசித்தாந்த பண்டிதர் சைவபரிபாலனசபை

யாழ்ப்பாணம்

இன்றைய நிகழ்வுக்குத் தலைமை தாங்கியிருக்கும் பாடசாலை அதிபருக்கும் பிரதம விருந்தினராக சமூகம் கொடுத்திருக்கும் வலிகாம வலய வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் சிறப்பு விருந்தினர்களுக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் மாணவச் சிறார்களுக்கும் பெற்றோர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் சிற்றூழியர்களுக்கும் எனது வணக்கத்தை முதற்கண் தெரியப்படுத்துகிறேன். மேலும் இப்பாடசாலையில் எனக்குக் கல்வி புகட்டிய வாழ்நாள் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் மறைந்த ஆசான்களுக்கும் என்னுடன் கல்வி பயின்ற சக மாணவ சகோதர சகோதரிகளுக்கும் என் அன்பு வணக்கங்கள்.

இன்று "மகாஜனாவின் புகழ்பெற்ற முன்னோடிக் கவிஞர்கள்" என்ற தலைப்பில் உரையாற்ற முன் வந்துள்ளேன். மகாஜனாவின் மைந்தர்கள் பலருள் கவிஞர்கள் என்ற மகத்துவத்தைப் பெற்ற மகான்கள் பற்றி இன்றைய நாளில் சிந்திப்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயம். கவித்துவம் என்பது கடைச்சரக்கல்ல. அது உயிர்த்துடிப்பின் வெளிப்பாடு உள்ளத்தில் தோன்றிய நல்லுணர்வுகள் வார்த்தைகளாக வெளிவரும் ஒரு வடிகாலமைப்பு அந்த வகையில் பாவலர் அவர்களின் உள்ளத்து ஒளி அவரிடமிருந்து தோன்றி அவர் வழியாக கவித்துவப் பரம்பரையை உருவாக்கி வருவதை இன்று நாம் நினைவு கூருவோம்.

பாவலர் வாழ்ந்த காலம், அவரது குடும்பப் பின்னணி அவர் கல்வி கற்ற பாடசாலை, நிறுவனங்கள் அன்றைய சமூகச் சூழல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அவா எழுதிய கவிதைகளில் அவற்றின் பிரதிபலிப்பைக் காண முடிகின்றது. அவர் கிறீஸ்தவ மதக் கோட்பாட்டை தனது சமூக சூழலாகக் கொண்டு கல்வி கற்றிருந்தாலும் சகல மக்களும் அறிந்து உணர வேண்டிய

ஒழுக்கலாறுகளை எடுத்துக் காட்டும் விதமாக, எடுத்துரைப்பன வாகவே அவரது கவிதைகள் அமைந்துள்ளன. இன மத வெறிகளுக்கு அப்பாற் பட்டு மக்களை நன்னெறிப்படுத்தும் பாடல்களாகவே காணப்படுகின்றன. அவர் வாழ்நத காலத்தில் காணப்பட்ட ஆசாரக் கேடுகள் பலவற்றை இனங்கண்டு பலியிடுதல் தேவதாசியர் நடனம் (சின்னமேளம்) பாலிய விவாகம், பெண்கள் அவல நிலை என்பனவற்றைக் கண்டித்து உள்ளத்தைச் சீராக்கம் செய்யும் பண்புகளை, மக்கள் உணர்ந்து கொள்வதனை மையமாக் கொண்டு பாடல்களைப் பாடியுள்ளமை அவரது எச்சங்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளமை தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.

மனிதன் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற மனநிலையில் இருந்து விடுபட்டு தனக்கும் தன்னைச் சூழ உள்ள சுற்றத்துக்கும் நீதி நியாயம் கிடைக்க வேண்டும் என்ற விழுமியக் கருத்தை எண்ணத்திற் கொண்டு காலத்துக்கு ஏற்றவாறு கருத்துக்களை வெளிப்படுத்தி “வழக்காடலினால் வரும் தீமை” என்ற கீர்த்தனையைப் பாடியுள்ளமை அவரது உள்ளத்து ஒளிமயமான நிலைமையை புலப்படுத்துகின்றது. சீதன வழக்கின் தீமைகள், மதுபானத்தின் தீமைகள், பண வாஞ்சை, வீண் செலவு, ஜீவ காருண்ணியம் முதலிய கருப் பொருட்களைக் கொண்ட பாடல்கள் பாவலரின் சமூக சீர்திருத்தக் குறிக்கோள்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

பாவலர் அவர்கள் தனது எண்ணக் கருத்துக்கள் மக்களைச் சென்றடைந்து அவர்கள் சிந்தித்து புத்தி பூர்வமாக தமக்குள் உணர்வு பெற்று தம்மைத் தாமே சுயமாகத் திருத்தி அமைக்கக் கூடிய வகையில் இசைப்பா வடிவத்தில் பாடல்களின் அமைப்பை இலகுபடுத்தி மக்களின் நாவில் நின்று நடமாடச் செய்த பெருமையும் பாவலர் அவர்களையே சாரும்.

பாவலர் தெ.அ.தரையப்பாபிள்ளை அவர்களின் துறைசார் அனுபவங்களாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம். அவர் ஒரு நாடக எழுத்தாளர், நாடக நெறியாளர், நவீன தமிழ்க் கவிஞர், கவியரங்கக் கவிஞர், இலக்கிய சமயச் சொற்பொழிவாளர், ஆசிரியர், அதிபர் - புதிய சைவக் கல்லூரி நிறுவுநர், பத்திரிகை ஆசிரியர்

**இவரது ஆசிரியப் பணி**

1. பாணந்துறை தூயயோவான் கல்லூரி (1892 - 1894)
2. இந்தியா பம்பாய் கோலாப்பூர் மிசன் உயர் நிலைப் பள்ளி (1895 - 1896)
3. இந்தியா பம்பாய் பெல்காம் மிசன் உயர் நிலைப்பள்ளி (1897 - 1898)
4. தெல்லிப்பழை சைவ ஆங்கில உயர்நிலைப்பள்ளி (1898 - 1900)
5. தெல்லிப்பழை அமெரிக்க மிசனெறிப்பாடசாலை (1900 - 1910)

**நிறுவுனரும் அதிபர் பணியும்**

6. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி (1910 - 1929)
7. சரஸ்வதி தமிழ் வித்தியாசாலை (1926)

**பத்திரிகை ஆசிரியப் பணி**

| | |
|---|---|
| உதய தாரகை ஆசிரியர் | 1901 |
| மாணவர் சஞ்சிகை ஆசிரியர் | 1904 |
| இந்து சாசனம் ஆங்கில உதவி ஆசிரியர் | 1921 - 1924 |
| இநது சாதனம் ஆங்கில ஆசிரியர் | 1924 - 1925 |

**ஆங்கிலப் பத்திரிகை புனை பெயர்கள்**

1. Jaffna spectator

2. Jaffna reformer

3. De omnibus Rebus

**இவரது படைப்புக்கள்**

1. கவிதைகள்

| | | |
|---|---|---|
| அ. சீலமலர் | கீதோபதேச ரச மஞ்சரி | 1901 |
| ஆ. பக்தி மலர் | சிவமணி மாலை | 1927 |
| இ. தேசிய மலர் | யாழ்ப்பாண சுவதேசக் கும்மி | 1907 |
| ஈ. சமூக மலர் | எங்கள் தேச நிலை | 1917 |
| உ. உணர்வு மலர் | தனிப் பாடல்கள் | |

2. நாடகம் சகலகுண சம்பன்னன் 1905

3. கட்டுரை (ஆங்கிலம்() Jaffna past and present

(Review இதழ் 1907 கொழும்பு)

**தொகுப்புக் கவிதை வெளியீடு**

| | | |
|---|---|---|
| சிந்தனைச் சோலை | பதிப்பு 1 | 1960 |
| | பதிப்பு 2 | 2005 |

ஆங்கில மொழியில் தமிழ் யாப்பு வெண்பா (பாவலர் பாடியது)

Eyes will be spoilt activities destroyed
yea truly all powers impaired - by daily
smoking or chewing snuffing or in anyway
making use of tobacco.

ஆங்கில மொழியில் இதுபோலப் பல பாடல்களை தமிழ்க் கீர்த்தனை மெட்டில் எழுதினார் பாவலர்

சமூக சிந்தனையை கவிதைப் பொருளாகக் கொண்ட கவிஞர் என்ற சிறப்பை இலங்கையின் இலக்கிய வரலாற்றில் இவர் பெறுகின்றார். இத்தகைய இவரது எண்ணங்கள் சிந்தனைகள் இவருடன் நின்று விடாது

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும் என்ற வள்ளுவன் வாக்கை இவரது கவிதைகளிலும் இவரைப் பின்பற்றி இவரது உள்ளத்து உணர்வைப் புரிந்து கொண்டு சமூக சீர்த்திருத்தத்திற்கு வழிகாட்டியாக விளங்கும் கவிஞர் பரம்பரையினரையும் ஆராய்ந்து பார்க்கும் போது பாவலரின் எச்சங்கள் இன்று இவ்வாறு மிளிர்கின்றமை என்பதைக் கண்டு மகிழலாம்.

பாவலர் துரையப்பாபிள்ளையின் கவித்துவப் பரம்பரையின ராகிய மகாஜனாவின் மைந்தர்களில் நாற்பதுக்கும் மேற்பட்ட கவிஞர்களை நாம் இனங்காணலாம். இவர்களுள் முதுபெருங் கவிஞர்கள் இளங்கவிஞர்கள் என்று வகைப்படுத்திப் பார்க்கும் போது அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களாக இருந்து ஆசிரியர்களாக வந்தவர்கள், மாணவர்கள் என பலதரப்பட்ட வகையில் பாகுபாடு செய்து அவர்களின் பாவன்மையைக் காண முடிகின்றது. அதிபர்கள் வரிசையில் முதலிடம் பெறுபவர்கள் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை அவர்களும் அவரது முன்னோடி மாணவரும், ஆசிரியருமான கவிஞர் கா.சின்னப்பா ஆசிரியருமாவார்.

கவிஞர் கா.சின்னப்பா என்பவரது முழுப்பெயர் திரு காசிப்பிள்ளை சின்னப்பா என்பதாகும் இவர் அளவெட்டியில் 1897ல் பிறந்தார். முன்னர் உடையார் பாடசாலை எனப்பட்ட இன்றைய அருணோதயக் கல்லூரியில் பயின்றார். இங்கு தமிழ்க் கல்வியில் மூன்றாம் ஆண்டில்சித்தியெய்திய பின்னர் தெல்லிப்பழை மிசன் பாடசாலையில் படித்தார். அங்கு அதிபராய் இருந்த பாவலர் துரையப்பாபிள்ளை அப்பாடசாலையில் இருந்து விலகிய போது அவரோடு சென்றார். தெல்லிப்பழை மகாஜனாவில் அவரிடம் கற்று SSC தேர்வில் சித்தியெய்தினார். 1914ல் மகாஜனா ஆசிரியரானார். அங்கு கற்பித்த போது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்று

பயிற்சி பெற்றார். அப்போது அங்கு கற்கும் மாணவர் தலைவரானார். பயிற்சி முடிந்ததும் மகாஜனாவில் சேர்ந்தார். பாவலருக்குப் பின் அதிபரானார்.

புகழ் பெற்ற கவிஞரான இவர் உள்நாட்டு இதழ்களிலும் தமிழக ஆனந்த போதினி என்ற புகழ் பெற்ற வார இதழிலும் கவிதை எழுதினார். செய்தித் தாழ்களிலும் மக்கள் சமாதானமாக வாழ சமூகப் பிரச்சினைகள் பற்றியும் எழுதி வந்தார்.

அடுத்து ஆசிரியர்களாகப் பணிபுரியும் காலத்தில் தமது உள்ளக் கருத்துக்களை கவிதையாக வடித்துத் தந்த ஆசான்களில் திரு செ.சுப்பிரமணியம் புலவர் நா.சிவபாதசுந்தரனார் தெல்லியூர் நா.ஆறுமுகம் சைவப் புலவர் சு.செல்லத்துரை திருமதி மரகதவல்லி சர்வானந்தராசா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் சிலர் வாழ்நாள் கவிஞர்களாக இன்றும் எம் மத்தியில் மிளிர்கின்றனர். என்பது நாம் செய்த தவப்பயனாகும். அடுத்து மாணவரும் ஆசிரியரும் என்ற வகையில் பார்க்கும் போது கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை அவர்களும் மயிலங்கூடலூர் பி.நடராஜன் அவர்களும் எமது கண்முன் தோன்றுகின்றனர். இவர்களது நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன்நடையும் தேசிய உடையும் எமது கண்முன் நிழலாடுகின்றன.

மகாஜனக் கவிஞர்களில் மிகப் பெருமை வாய்ந்தவர்கள் முப்பெருங் கவிஞர்கள் என்று அழைக்கப்படும் வரிசையில் கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை ஆசிரியரும் மகாகவி து.உருத்திரமூர்த்தி ஆ.ந.கந்தசாமி ஆகியோரும் அடங்குவார். இவர்களில் செ.கதிரேசர்பிள்ளை (கதிரேசன்) அவர்கள் மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் போது மறுமலர்ச்சி வட்டாரத்தில் பிரபலமாக விளங்கியவர். இவரது கவித்துவத்துக்கு ஆதாரமாக அக்காலத்தில் வெளிவந்த “ஈழகேசரி” பத்திரிகையில் உள்ள

கவிதைகள் சான்றாதாரங்களாகின்றன. இவர் இலக்கிய ரசனையில் சிறந்தவர். கவிதைப் புலமையுடன் நாடக எழுத்துருவாக்கம் செய்து பாடசாலை மாணவர்களின் நடிப்புத் திறனை வெளிக் கொணரவும் தனது அயரா முயற்சியை மாணவர்களுக்கு நல்கிய ஆசானுமாவார். இவரது கவித்திறனை வானொலி கவி அரங்கங்களிலும் பிற கவி அரங்கங்களிலும் கேட்டு மகிழ்ந்தவர் பலர் நம்மிடையே இன்றும் உலாவுகின்றனர்.

மகாஜனக் கவிஞர் வரிசையில் இன்று ஈழத்தில்புகழ் பெற்ற மஹாகவி என்று அழைக்கப்படும் து.உருத்திரமூர்த்தி என்பவர் சிறப்பிடம் பெறுகிறார். இவரது கவிதைகள் பெரும்பாலும் சமூக சீராக்கத்தை மையமாகக் கொண்டு படித்தவர். உள்ளத்தில் பட்டென தொனிக்கும் வல்லமை கொண்டவை. இவர் மறுமலர்ச்சி வட்டாரம் பெற்ற மற்றொரு கவிஞர். “கல்லழகி” என்ற சிறு காவியமும் “வள்ளி” என்ற கவிதைத் தொகுதியும் இவரது பெருமைக்கு என்றும் சான்று பகர்வன. அதுமட்டுமன்றி இவரது கவிதைகள் பல இன்றைய பாடப் புத்தகங்களில் உள்ளடக்கப் பட்டுள்ளமை இவரது சிறப்பை எதிர்கால சமூகம் விளங்கிக் கொள்ளவும் “தேடல்” முறையில் அவரது கவிதைகளைத் தேடிப்பெற்று, படித்து, உய்த்துணரவும் வழிவகை செய்யப்பட்டமை எமது மாணவச் செல்வங்களின் வரப்பிரசாதமாகும்.

அடுத்து முப்பெரும் கவிஞர்கள் என்ற வகையில் அடங்குபவர் அ.ந.கந்தசாமி ஆவார். இவரும் முன்னாள் அதிபர் கவிஞர் க.சின்னப்பா அவர்களால் உருவாக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. முற்போக்கு இலக்கியத்தின் பிதாமகர்களில் ஒருவராகக் கொள்ளப்படும் இவர் இலை மறை காய் போல் வாழ்ந்தாலும் தம் ஆக்கங்களாலும் செயற்பாடுகளாலும் முற்போக்கு இயக்கத்தின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது வெளியீடுகளில்

முதல் நூல் "வெற்றியின் ரகசியம்" இவர் "மதமாற்றம்" என்ற நாடக நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார். 1986ம் ஆண்டு வெளிவந்த மல்லிகை இதழில் அன்ரனி ஜீவா பின்வருமாறு குறிப்பிட்டமை இங்கு நினைவு கூரத்தக்கது. இவரது சிறுகதைகள், கவிதைகள், மொழியெர்ப்புக்கள், "மனக்கண்", நாவல் என்பவற்றை அச்சில் வெளியிட்டு அவரது ஆளுமையை நிலை நாட்ட நாம் முன்வர வேண்டும் என்பது அக்கூற்றாகும். பேராசிரியர் கைலாசபதியும் 1982 மே மாத மல்லிகை சஞ்சிகையில் "அ.ந.கந்தசாமி முதல் ஆதவன் வரையில் பாரதி பரம்பரை புதுப்புது வண்ணமும் வடிவமும் இலங்கையில் பெற்று வந்திருப்பது பெருமையைத் தந்ததாகும்" என்று குறிப்பிட்டுள்ளார். "கவிதை உள்ளடக்கத்தைப் பொறுத்த வரையிலும் சமுதாய சார்புடைய கவிதைகளை முதலிற் பாடியவர் என்ற விதத்திலும் மகாகவியை விட ஒருபடி மன்னிற்கின்றார். அ.ந.கந்தசாமி" என்று செ.யோகராசா மல்லிகை இதழில் (1975 ஆகஸ் பக் 67) குறிப்பிட்டுள்ளமையும் இவரது புகழை பறைசாற்றுகின்றது. தீண்டாமை ஒழிப்புத் தொடர்பாக "வில்லூன்றி மயானம்" (தினகரன் 9.11.1944) என்ற கவிதை மிகப் பிரபல்யம் வாய்ந்தது. இது நான்கு எண்சீர்விருந்தப் பாடல் கொண்டது.

...... நெடுநாள் எங்கள்
நாட்டினிலே கிளைபரப்பும் சாதி என்றும்
நச்சுமர வீழ்ச்சியினைக் காண்பதற்காய்
வாட்ட முற்ற மக்களுளம் கனன்று பொங்கும்
வல்ல தொரு புரட்சித்தீ வாழ்க வ்.்.து

அ.செ.மு, அ.ந.க. மகாகவி மூவரும் ஒரே குடும்பத்தினர் அருகருகே வாழ்ந்த அளவெட்டியினர் இவர்களும் கவிஞர் கதிரேசனும் மாலையில் சந்தித்து ஒரே கோட்பாட்டாளராக உருவாகினார். மகாஜான்விலும் சமகாலத்தில் படித்தவர்களு மாவார்கள் இவர் பல்வேறுபட்ட துறைகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தினார். கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம்,

இலக்கிய விமர்சனங்கள் படிக்கும் தோறும் இவரது ஆளுமையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இவர்கள் நால்வரும் மூதறிஞர் வரதருடன் மறுமலர்ச்சிக் குழுவில் இணைந்து செயற்பட்டவர்கள் ஆவர். இவர்கள் ஈழகேசரி பத்திரிகையின் முன்னோடி எழுத்தாளர்களாகவும் விளங்கினர். (அன்ரனி ஜீவ - மல்லிகை தை 1968) முற்போக்காளராக இருந்து அரச பணியாற்றிய போது “சிங்களச் சட்டம்” உருவாக சிங்களப் பரீட்சை எடுக்காமல் வெளியேறியவர்.

அ.ந.க.வின் கவிதைகளை நூலாக வெளியிட பெரு முயற்சி செய்ய வேண்டும். இவை வெளிவராததாலேயே அவரது முக்கிய பங்கு இலக்கிய வரலாற்று ஆய்வாளர்களால் செய்யமுடியாமல் போய்விட்டது. எனவே வெளியீடு அவசியமர்கும். அ.ந.க. மகாஜனா ஆங்கில வித்தியாலய மாணவராக இருந்த போது ஈழகேசரி இதழில் கட்டுரை எழுதியவர்களுள் திறமையுள்ள எழுத்தாளர்களுக்கான முதற்பரிசு அ.ந.க. வுக்கே 1939ம் ஆண்டு கிடைத்தது. (இரசிமணி கனக செந்திநாதன் - வெள்ளி) அ.ந.க வின் புனைப் பெயர்கள் கவீந்திரன் - சிப்பி, கலையரசன், பண்டிதர், திருமலைராயர் - புருனே -என்.கே. என்பனவாகும்.

1940 களில் ஈழசேகரியில் என் முற்போக்குக் கவிதைகள் வந்திருக்கின்றன. “ஈழத்தில் ஒரு கம்யூனிஸ்ட கட்சி கூட உருவாகாத அந்தக் காலத்திலேயே நான்“ தொழிலாளர் புரட்சி பற்றி ஈழகேசரியில் கவிதைகள் எழுதியிருக்கின்றேன் என்று 17.09.1967ல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். (மல்லிகை - மார்ச் 1970)

அ.ந.கந்தசாமி அவர்கள் 1940 களில் மறுமலர்ச்சிப் பிதாமகர்களுள் ஒருவராகவும், 1950 களில் முற்போக்குப்

பிதாமகர்களுள் ஒருவராகவும், 1940, 50 கள், 60களில் மறுமலர்ச்சியாளர்களுள் முற்போக்காளராகவும் முற்போக்காளருள் மறுமலர்ச்சியாளராகவும் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரர் எழுதிய கவிதைகளில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவை பின்வருவனவாகும்.

நகரம் - சுதந்திரன் 18.03.1951
துறவியும் குஷ்ட ரோகியும் சுதந்திரன் 14.1.1951
கைதி - சுதந்திரன் 5.8.1951
காதல் தத்துவம் - சுதந்திரன் 30.12.1951
தேயிலைத் தோட்டத்திலே ......
முன்னேற்றச்சேனை ......
இரவு
சிந்தனையும் மின்னொளியும்

மகாஜானாவின் புகழ்பெற்ற முன்னோடிக் கவிஞர்கள் வரிசையில்“ சிறப்பிடம் பெறும் கவிஞர்களுள் புலவர் ம.பார்வதி நாதசிவமும் அழியாத ஓர் இடத்தைப் பெறுகின்றார். இவர் கதிரேசப்பிள்ளையின் மாணாக்கர் . மகாஜனக் கல்லூரியில் மாணாக்கரின் தமிழ் அறிவை மேம்படுத்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட “வளர்மதி” என்ற கையெழுத்துச் சஞ்சிகையில் மாணவனாக இருந்த பார்வதிநாதசிவத்தின் கவிதைகளும் இடம் பெற்றிருந்தன. பார்வதி நாத சிவத்திடம் கவிதை ஆற்றல் இருப்பதை அறிந்து கொண்ட கவிஞர் கதிரேசர்பிள்ளை அவரை தனது வீட்டுக்கு வரச் செய்து யாப்பிலக்கணம் முழுவதையும் சொல்லிக் கொடுத்தார். பாரதியார், பாரதிதாசன் போன்றோரின் பாடல்களையும் பார்வதிநாத சிவத்திற்கு கற்றுக் கொடுத்தார். பார்வதி நாத சிவம் சி.பா.த.பா. (SSC) வகுப்பில் படிக்கின்ற போது எழுதிய பாடல்கள் வீரகேசரி சுதந்திரன் ஆகிய பத்திரிகையில் - மாணவர் பகுதியில் பிரசுரமாகின. இவரைக் கவிதைத் துறையில் ஊக்கிவித்த பெருமை

கவிஞர் கதிரேசர் பிள்ளையைச் சாரும். இவர் எழுதி வெளியிட்ட நூல்களில் காதலும் கருணையும் (1972) இருவேறு உலகம் (1980), இரண்டு வரம் வேண்டும், இன்னுமொரு திங்கள், தையல் நாயகி திருப்பள்ளி எழுச்சி என்பன சிறப்பிடம் பெறுகின்றன.

கவிதை, கட்டுரை, காவியம் போன்ற ஆக்கங்களைப் படைத்த இவர் இளமைக் காலத்தில் வீமன்காமம் மகாவித்தியாலயத்திலும், மகாஜனக் கல்லூரியிலும் கல்வி பயின்று புலவர் பட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவர் ஈழநாடு பத்திரிகையின் உதவியாசிரியராகவும் வாரமலர் ஆசிரியராகவும் சுதந்திரன், உதயன். முரசொலி, ஈழநாதம் போன்ற பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகித்தவர். இவரது காதலும் கரணையும் என்ற கவிதை நூலைப் பற்றி செந்தமிழ்ச் செல்வர் பண்டிதர் இ.நமசிவாயம் அணிந்துரையில் - காதலும் கருணையும் என்னும் நூலில் அரிய பல விடயங்களை சுருக்கமாக ஆனால் விளக்கமாக அமைந்துள்ளன. இலகுவான சொற்பிரயோகம் பெற்றுப் பொருள் வளமும் செய்யுட்குறிப்பும் அமைந்து சிறந்த பல புலவர்களை ஞாபகம் செய்கின்ற ஓசை நயமும் சொன்னெறியும் பொருந்திய பலவகையணிகளும் அணிந்து இடத்துக்கேற்ற சந்த வேறுபாடு பெற்றுச் செல்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன் தனது அணிந்தரையில் - சொன்னடையும் சொற்சேர்க்கை க்வியொழுக்கு பார்வதிநாத சிவத்துக்குக் கைவந்தது. அவர் விட்ட மூச்சும், உண்ட பாலும் கேட்ட முதல் வார்த்தையும் கவிதை என்றால் முற்றிலும் உண்மை அவரது இரத்தத்திலே பல சந்ததியாக உறிப்போன கவிதையின் துடிப்பு ஓடிக்கொண்டிருப்பது உண“மை. அவர் தகப்பனார் மகாலிங்கசிவம் என்பதும் பேரனார்

ம.க.வேற்பிள்ளை என்பதும் உலகமறிந்தது. இந்நூல் அச்சில் மாத்திரம் வாழாது மக்கள் மனதில் வாழுமென்று எண்ணுகிறேன். பார்வதிசிவம் அவர்களின் கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைப் பொருள்கள் அவருடைய மென்மனத்தை எடுத்துக் காட்டுகின்றன. பணிப் பெண்ணின் பணியாளனாகவும் கடலை விற்கும் பெண்ணுக்கு உருகுபவராகவும் காதல் நெஞ்சினராகவும் இறைவனின் அன்பிலே இன்பம் காண்பவராகவும் தோற்றுகின்றார். அன்றியும் அழகுக்காட்சிகளிலும் தமிழன்பிலும் ஈடுபடுகின்றாள் காதலிலும் தியாகத்தைக் காண்கிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். கலைமாணி ந.சண்முகசுந்தரம் பார்வதிநாதசிவம் பற்றி நூலாசிரியர் அறிமுகத்தில் (1972) பின்வருமாற்று குறிப்பிடுகின்றார்.

"அண்ணாமலை செழுங்கலை நிலையத்தில் தமிழ் பயின்ற புலவர் பார்வதிநாத சிவம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அடிப்படையைக் கல்வி பெறுங்காலை இவரின் கணிதப் பயிற்சிப் புத்தகங்களில் ஆங்காங்கு கவிதைகள் ஊற்றெடுத்தன. இளமையில் இயல்பாகவே தோன்றிய இந்தக் கவிதை அருவியே இவரிடம் இப்பொழுது குதித்தோடுகின்றது. இவருடைய பாடல்களில் கற்பனை வளமும் கருத்தாழமும் நிறைந்திருப்பதைக் காணலாம். இவரது மானம் காத்த மறக்குடிவேந்தன் என்ற கவிதை உதயன் பத்திரிகையில் தொடர் கவிதையாக 21.09.2003ல் இருந்து வெளிவந்தது. மேலும் "ஒரு விழா" 1985ல் காங்கேயன் கல்வி மலரிலும் "பவள விழாக் காணும் மெய்கண்டாள் வாழியவே" என்பது இளவாலை மெய்கண்டான் ம.வி பவள விழா மலரிலும் "ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் - இலக்கிய கலாநிதி பண்டிதமணி ஏழாலை மு.கந்தையா அவர்களின் நினைவு வெளியீட்டிலும் - பெருங்கருணைத் தெய்வம் - அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் மகா கும்பாபிசேக மலரிலும் (31.1.1990) வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து முன்னோடிக் கவிஞர்களில் புலவர் நா.சிவபாதசுந்தரனாரின் குழந்தைக் கவிதைகள், எமது கல்லூரிக் கீதம் போன்ற கவிதைகள் அவரின் கவிதைத் திறனை வெளிப்படுத்துகின்றன.

அடுத்து மயிலங்கடலூர் பி.நடராஜன் (ஆடலிறை) இவரின் குழந்தைப் பாடல்கள் நூல் 2005ல் வெளியிடப்பட்டது. எமது கல்லூரி எழுத்தாளர்களின் குழந்தைக் கவிதை, கவிதை சிறுகதைத் தொகுப்பு நூல்களை வெளியிட மகாஜனக் கல்லூர உலகப் பழைய மாணவர் சங்கத்தால் நியமிக்கப்பட்ட எழுத்தாளர் குழுத் தலைவராகவும் பணியாற்றுகிறார். கவிஞரும், மாணவர் கவிஞர்களாக பௌராணிக வித்தகர் பிரதசிறீ வ.குகசர்மா நெல்லியூர் செ.நடராசன் பன்மொழிப்பலவர் மயிலங்கூடலூர் த.கனகரத்தினம் மயிலங்கூடலூர் பண்டிதர் சி.அப்புத்துரை பேராசிரியர் சபா ஜெயராசா, பேராசிரியர் நா.சண்முகலிங்கம், திரு ஆ.சிவநேசச் செல்வன், மாவை தி.நித்தியானந்தன், குரும்பசிட்டி கலாநிதி மு.க.சு.சிவகுமாரன், திரு குரு அரவிந்தன், திரு அ.புராங்கரன், திரு உ.சேரன், திரு க.ஆதவன். திரு பா. பாலசூரியன், திருமதி யுவனேஸ்வரி போன்றோரை வரிசைப் படுத்தலாம். கிடைத்த கவிதைகள் அடிப்படையில் இப்பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது..

முன்னோடிக் கவிஞர்களின் கவிதைகள் வெளிவந்த நூல்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

நூல் : ஈழத்துக் கவிதைக் கனிகள்

தொகுப்பு டாக்டர் சிலோன் விஜயேந்திரன் M.A.D.Lir
வெளியீடு :- பாரிநிலையம் சென்னை 1991
வெளிவந்த மகாஜனன் கவிஞர்கள்

1. மகாகவி
2. சேரன்
3. இளவாலை விஜயேந்திரன்
4. திரு செ.சிவசுப்பிரமணியம்
5. சபா ஜெயராசா
6. புலவர் பார்வதி நாதசிவம்
7. திருமதி கோகிலா மகேந்திரன்
8. ஆனந்தி நடராசா
9. க.ஆதவன்
10. அ.ந.கந்தசாமி
11. கதிரேசன்
12. திரு கந்தையா முருகதாஸ்
13. இளவாலை தி.விஜயேந்திரன்
14. திரு ம.பா.மகாலிங்கசிவம்
15. திரு பா.பாலமுரளி
16. திருமதி ஔவை விக்னேஸ்வரன்
17. திருமதி பாரதி சேந்தனார்.

நூல் : ஈழத்துக் கவிதைக் நயம் (கட்டுரைகள்)
ஆசிரியர் : சிலோன் விஜயேந்திரன்
வெளியீடு : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை 2002

கவிதை விளக்கக் கட்டுரையில் இடம்பெற்றனர்

1. மகாகவி கட்டுரை இல 2
2. சேரன் கட்டுரை இல 11

பன்மொழிப்புலவர் த.கனகரத்தினம்
குழந்தைக் கவிதை நூல்கள்

1. சிறுவர் பாடல்கள்
2. மழலைத் தமிழ்ப் பாடல்கள்